29.04.2026

அ.வ.எண். 58/2023

வா.சா.1 – திரு. சேகர், த/பெ. ராஜு

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 29.04.2026 is accordance with the provision of Act X of 3331

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 1 ம் பிரதிவாதி எழுதி கொடுத்த பவர் பத்திரத்தில் காலக்கெடு நிர்ணயம் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியிடம் ரூ.1,10,000/- பேசி முடித்ததாக சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் எழுதி கொடுத்துள்ளார். ரூ.1,10,000/- க்கு விலைபேசியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான வருவாய் ஆவணங்களை எப்போது பார்த்தேன் என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்போது பார்த்தேன், அதற்கு முன்பாக நான் பார்க்கவில்லை. 2019 ம் ஆண்டு கொரோனா தொற்று ஏற்பட்டது என்றால் சரிதான்.

2. 2016 முதல் 2019 இடையே 3 வருட காலம் இடைவெளி உள்ளது என்றால் சரிதான். மேற்படி காலகட்டத்தில் கிரயம் செய்ய முயற்சி செய்யவில்லை என்றால் நான் முயற்சி செய்தேன், அனிதா ஒத்துவரவில்லை. நான் முயற்சி செய்ததற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாய்மொழி வார்த்தை தான். நான் முயற்சி செய்தததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. காவல் நிலையம் சென்று CSR பெற்றுள்ளேன். கொரோனா காலத்தில், தாவா சொத்தினை கிரயம் பெற முடியவில்லை என கூறுவது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல.

3. அனிதா பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்து விட்டதாக சொல்லி எனக்கு பதிவு தபால் அனுப்பினார் என்றும் என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த கடிதம் என்றால் சரிதான். **18.05.2023 தேதியிட்ட வாதி, 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய பொது அதிகார ரத்து ஆவணம் பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு அஞ்சல் மூலமாக கடிதம் வந்தது. 1ம் பிரதிவாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து காவல் நிலையத்தில் இருந்து என்னை அழைத்து விசாரித்தனர் என்றால்

இல்லை. நான், 1ம் பிரதிவாதி மீது புகார் கொடுத்து அவரை அழைத்து விசாரித்தனர். 1ம் பிரதிவாதியின் கணவர் 12.02.2014 ல் இறந்துவிட்டார் என்றால் தேதி தெரியாது. ஆனால் அவர் இறந்துவிட்டார். பின்னிட்டு 1ம் பிரதிவாதி என்னை அணுகி தாவா சொத்தை விற்பது குறித்து கேட்டபோது நான் முறையான பதில் எதுவும் கொடுக்கவில்லை என்றால் தவறு.

4. அப்போது நான், 1ம் பிரதிவாதியிடம் 2 வெள்ளைத்தாள்களில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை. பின்னிட்டும், தாவா சொத்தை விற்பனை செய்ய நான் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்னிடம் இருந்து கடந்த 16.03.2016 தேதியிலோ அல்லது வேறு தேதியிலோ எந்த தொகையும் பெறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ரசீது ஆவணம் பொய்யாக தயார் செய்யப்பட்ட மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ரசீது ஆவணத்தில் உள்ள கையெழுத்து 1ம் பிரதிவாதியினுடையது அல்ல என்றால் அவர் தான் கையெழுத்து செய்தார்.

5. ரசீதில் உள்ள சாட்சிகள் 1ம் பிரதிவாதிக்கு யார் என்று தெரியாது என்றும், எனக்கு வேண்டியவர்களை வைத்து கையெழுத்து பெற்றுள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதி அழைத்து வந்து 2 சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றார். மேற்படி ரசீது ஆவணத்தை 1ம் பிரதிவாதியின் கையொப்பம் போல் எனக்கு வேண்டியவர்களை வைத்து மோசடியாக உருவாக்கியுள்ளேன் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி எல்லாவற்றையும் கொடுத்த பிறகு நான் ரூ.1,10,000/- கொடுத்தேன். 1ம் பிரதிவாதியிடம் இருந்து தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் தான் ரசீது ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை.

6. 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய சட்டப்படி உரிமை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் யாருக்கு விற்க முயற்சி செய்தேன் என பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. தெரிந்தவர்கள் வந்து கேட்கும்போது சொல்வேன். தாவா சொத்து குறித்து விற்பனை செய்யும் எண்ணம் இருந்திருந்தால் பவர் ஆவணம் எழுதி கொடுத்த தேதியில்

இருந்து முயற்சி செய்திருப்பேன் என்றும், தாவா சொத்தை அபகரிக்கும் எண்ணம் இருந்ததால் தான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை விற்பனை செய்ய வேண்டி ஆகஸ்ட், 2022 ம் ஆண்டு 1ம் பிரதிவாதியை அணுகியதாக சொல்வது பொய் என்றால் நான் கேட்கவில்லை. தாவா சொத்து மீது எனக்கு சட்டப்படியான உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

1. பி.சா.ஆ.2 கடிதம் அஞ்சலக ரசீது மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**மறுகுறுக்குவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur